தருமபுரி மாவட்டத்தில்

1,128 பேருக்கு ரூ. 22.28 கோடி கல்விக்கடன்: ஆட்சியர்

தருமபுரி, நவ. 28: தருமபுரி மாவட்டத்தில் 1,128 மாணவர்களுக்கு ரூ. 22.28 கோடி கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ்.

தருமபுரி மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் மாவட்ட நிர்வாகம், முன்னோடி வங்கிகள் சார்பில் மாபெரும் கல்விக்கடன் வழங்கும் முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ் தலைமை வகித்து, தேர்வுசெய்யப்பட்ட மாணவ, மாணவியருக்கு கல்விக்கடன்களை வழங்கி பேசியதாவது:

தமிழக அரசு மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையிலும், உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியர் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையிலும் கல்விக்கடன் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், தருமபுரி மாவட்டத்தில் நவ. 27-ஆம் தேதிவரை நடைபெற்ற முகாம்கள் மூலம் 1,128 மாணவ, மாணவியருக்கு ரூ. 22.28 கோடி கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்த நிகழ்வில் ரூ. 7.27 கோடி மதிப்பிலான கடனுதவிகள் 146 மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டுள்ளன.

தருமபுரி ஆட்சியர் அலுவலகத்தில் கல்விக்கடன் வழங்கிய ஆட்சியர் ரெ.சதீஸ், தருமபுரி மக்களவை உறுப்பினர் ஆ.மணி.

உயர்கல்வி பயிலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு இந்த கல்விக் கடனுதவி அவர்கள் படிப்பை தொடர வாய்ப்பாக அமைகிறது. குறிப்பாக, அதிக கல்விக் கட்டணமுள்ள பாடப் பிரிவுகளை (மருத்துவம், பொறியியல், வெளிநாட்டு கல்வி போன்றவற்றை) படிக்க விரும்பும் மாணவர்களுக்கு, கல்விக்கடன் பெரிய ஆதரவாக இருந்து வருகிறது. இதன் முக்கியத்துவம் கருதி, தமிழக அரசு தருமபுரி மாவட்டத்தில் 1,500 மாணவ, மாணவியருக்கு ரூ. 40 கோடி கடனுதவி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற கல்விக்கடன் முகாம்கள் டிசம்பர் இறுதிவரை வட்டார அளவில் நடத்தப்படவுள்ளன. எனவே, மாணவ, மாணவியர் இவ்வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

இந்நிகழ்ச்சியில், தருமபுரி மக்களவை உறுப்பினர் ஆ.மணி, சட்டப் பேரவை உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், இந்தியன் வங்கி மண்டல மேலாளர் வி.கோவிந்தராஜு, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் எஸ்.ராமஜெயம், மாவட்ட தொழில்மைய பொது மேலாளர் பி.சுப்பையா பாண்டியன் உள்ளிட்ட வங்கி அலுவலர்கள், மாணவ, மாணவியர், பெற்றோர் கலந்துகொண்டனர்.

அறிவியல் கண்காட்சி போட்டி: அரசுப் பள்ளி மாணவ, மாணவியர் பங்கேற்பு

கிருஷ்ணகிரி, நவ. 28: கிருஷ்ணகிரியில் அரசு பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பங்கேற்ற அறிவியல் கண்காட்சி போட்டி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கிருஷ்ணகிரி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் துறை மற்றும் வானவில் மன்றம் இணைந்து அறிவியல் கண்காட்சி போட்டியை வெள்ளிக்கிழமை நடத்தின. மாவட்ட அளவிலான இந்தப் போட்டியில், ஒன்றிய அளவிலான போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.

கிருஷ்ணகிரியில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியைப் பார்வையிட்ட கல்வித் துறை அலுவலர்கள்.

இந்தப் போட்டியை தனியார் பள்ளிகளின் மாவட்டக் கல்வி அலுவலர் கோபாலப்பா தொடங்கிவைத்தார். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் வெங்கடேசன், வட்டாரக் கல்வி அலுவலர் லோகநாயகி, உதவி திட்ட அலுவலர் மகேந்திரன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மீனாட்சி, வட்டார வளமைய மேற்பார்வையாளர் அசோக் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதில் பல்வேறு பள்ளிகளில் இருந்து பங்கேற்ற மாணவ, மாணவிகள் தாங்கள் தயாரித்த அறிவியல் படைப்புகளை காட்சிப்படுத்தினர்.

போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் கிருஷ்ணகிரி வட்டாட்சியர் ரமேஷ், சான்றிதழ் வழங்கினார். இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களில் வெற்றிபெறுவோர், மாநில அளவிலான போட்டிக்கு தகுதிபெறுவர்.

அதிமுகவினர் திண்ணைப் பிரசாரம்

தருமபுரி, நவ. 28: தருமபுரி நகரில் அதிமுக சார்பில், திண்ணைப் பிரசாரம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தருமபுரி நெசவாளர் நகரில் நடைபெற்ற இந்தப் பிரசாரத்துக்கு, தருமபுரி மாவட்ட ஜெயலலிதா பேரவைச் செயலாளர் எஸ்.ஆர்.வெற்றிவேல் தலைமை வகித்தார். நகரச் செயலாளர் பூக்கடை பெ.ரவி வரவேற்றார். மாநில விவசாயிகள் அணி தலைவர் டி.ஆர்.அன்பழகன், மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளர் ர.அசோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் அமைச்சரும், கட்சியின் மாவட்டச் செயலாளருமான கே.பி.அன்பழகன் எம்எல்ஏ தொடங்கிவைத்து பேசியதாவது:

தமிழகத்தில் திமுக ஆட்சி பொறுப்பேற்ற நாளிலிருந்து அதிமுக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை முடக்கியுள்ளது. இந்த ஆட்சியில் அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் அதிமுக வெற்றிபெறுவது உறுதி என்றார்.

அதிமுக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட மக்கள் நலத் திட்டங்கள் குறித்த பிரசுரங்களை விநியோகித்த கே.பி.அன்பழகன் எம்எல்ஏ உள்ளிட்டோர்.

இதைத் தொடர்ந்து, அதிமுக ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட மக்கள் நலத் திட்டங்கள் குறித்த வாசகங்கள் அடங்கிய பிரசுரங்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

பெயர் மாற்றம்

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கிளாபாளையம் அஞ்சல், கருக்கூர் VTC, கதவு எண்.3/47ல் வசிக்கும் A.செந்தில்ராஜா மகனாகிய எஸ்.தீபக்ராஜா (பிறந்த தேதி: 13 மே 2006, பிறந்த மாவட்டம்: நாமக்கல்) ஆகிய நான் இனிமேல் SD தீபக்ராஜா என்று அழைக்கப்படுவேன்.

எஸ். தீபக்ராஜா
29.09.2025 நாமக்கல்

CHANGE OF NAME

I, **KUMARA DHAS SOURNAPPAN** (old name), born on 15/10/1988 (Place of birth- KAVADIYAN THOTTAM) S/o SORNAPPAN resident of 3/206, GANDHI NAGAR, 1ST FLOOR, SIPCOT-2, THORAPALLI AGRAHARAM, HOSUR, 635109, have corrected my given name as KUMARADHAS , changed my sur name and corrected my father name as SORNAPPAN and shall henceforth be known as **KUMARADHAS SORNAPPAN**

- KUMARA DHAS SOURNAPPAN

தினமணி தேவை

எமது நிறுவனத்தின் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, தருமபுரி, விழுப்புரம், நாகப்பட்டினம், புது தில்லி ஆகிய பதிப்புகளில் பணிபுரிய கீழ்க்கண்ட நிலைகளில் தகுதியுள்ள நபர்கள் தேவை.

உதவி ஆசிரியர்கள் (SUB - EDITORS) :
- பட்டதாரி
- 35 வயதுக்கு உட்பட்டவர்
- ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு நன்கு மொழிபெயர்த்தல்
- நல்ல தமிழ் நடையில் எழுதுதல்
- பொது அறிவுத் திறன்

நிருபர்கள் (REPORTERS) :
- பட்டதாரி
- 35 வயதுக்கு உட்பட்டவர்
- ஆங்கிலத்தில் உரையாடுதல்
- தமிழில் பிழையின்றி எழுதுதல்
- தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் வரும் 7 நாள்களுக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பங்களை அனுப்பலாம்.

E-mail : editordinamani@gmail.com

முறையாக குடிநீர் விநியோகம் செய்யக் கோரி கிராம மக்கள் சாலை மறியல்

சாலை மறியலில் ஈடுபட்ட கிராம மக்கள்.

பென்னாகரம், நவ. 28: பென்னாகரம் அருகே முறையாக குடிநீர் விநியோகம் செய்யக் கோரி, கிராம மக்கள் வெள்ளிக்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர்.

பென்னாகரம் அருகே கூத்தபாடி ஊராட்சிக்குள்பட்ட கே.குள்ளாத்திரபட்டி காலனி பகுதியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. இப்பகுதி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்திசெய்ய வீடுகள்தோறும் குடிநீர் குழாய் அமைக்கப்பட்டு தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது.

இருப்பினும் போதுமான குடிநீர் கிடைக்கவில்லை என பொதுமக்கள் அளித்த புகாரின் பேரில், ஆறு மாதத்துக்கு முன்பு இப்பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இந்நிலையில், குடிநீர் குழாய் செல்லும் வழித்தடம் பட்டா நிலம் என ஊராட்சி நிர்வாகத்திடம் தனிநபர் முறையிட்டார். அதன் பேரில், குடிநீர் குழாய் இணைப்பு துண்டிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இதைக் கண்டித்து, அப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் பென்னாகரம் - நாகமரை செல்லும் சாலையில் மறியலில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.தகவல் அறிந்து வந்த பென்னாகரம் வட்டாட்சியர் சண்முகசுந்தரம், ஒகேனக்கல் காவல் ஆய்வாளர் முரளி ஆகியோர் மறியலில் ஈடுபட்டவர்களிடம் இதுகுறித்து நடவடிக்கை எடுப்பதாக பேச்சுவார்த்தை நடத்தினர். அதையடுத்து, பொதுமக்கள் கலைந்து சென்றனர்.

அதைத் தொடர்ந்து, நில அளவையர் அப்பகுதியில் அளவைப் பணியை மேற்கொண்டார். பின்னர், சாலையோரத்தில் குடிநீர் குழாய் அமைத்து மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு இணைப்பு வழங்கப்பட்டது.

ஒசூரில் மாநில அளவிலான கபடி போட்டி தொடக்கம்

ஒசூர், நவ. 28: தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக சார்பில் ஒசூரில் மாநில அளவிலான கபடி போட்டி வெள்ளிக்கிழமை தொடங்கியது.

போட்டியை ஒசூர் சட்டப் பேரவை உறுப்பினரும், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளருமான ஒய்.பிரகாஷ் வெள்ளிக்கிழமை தொடங்கிவைத்தார். தளி சாலையில் உள்ள விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இந்தப் போட்டியில் மாநிலம் முழுவதிலும் இருந்து 38 அணிகள் பங்கேற்றன.

தொடக்க விழாவில் ஒசூர் ராமநாயக்கன் ஏரி பூங்காவில் இருந்து மாணவ, மாணவிகள் பங்கேற்ற அணிவகுப்பு பேரணி தளி சாலையில் உள்ள விளையாட்டுத் திடலை அடைந்தது. வெள்ளிக்கிழமை தொடங்கி ஞாயிற்றுக்கிழமை வரை 3 நாள்கள் நடைபெறும் இப்போட்டியில் வெற்றிபெறும் அணிகளுக்கு முதல் பரிசு ரூ. 1.50 லட்சம், இரண்டாம் பரிசு ரூ. 1 லட்சம், 3-ஆம் மற்றும் 4 ஆம் பரிசு தலா ரூ. 50 ஆயிரம் மற்றும் கேடயம் வழங்கப்படுகிறது.

அதேபோன்று, வெற்றிபெறும் மகளிர் அணிக்கு முதல் 4 பரிசுகளுக்கு தலா ரூ. 50 ஆயிரம் வழங்கப்படுகிறது. இதில் வெற்றிபெறும் அணியிலிருந்து தேசிய அளவில் நடைபெறும் கபடி போட்டிகளில் விளையாட வீரர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

விழாவில், ஒசூர் மாநகர மேயர் எஸ்.ஏ.சத்யா, துணை மேயர் சி.ஆனந்தய்யா, முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினரும், மாவட்ட துணைச் செயலாளருமான பி.முருகன், ஒசூர் மாநகராட்சி சுகாதாரக் குழுத் தலைவர் என்.எஸ்.மாதேஸ்வரன், வரிவிதிப்புக் குழுத் தலைவர் சென்னீரப்பா, மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மான் வேட்டை: இருவருக்கு ரூ. 4 லட்சம் அபராதம்

அரூர், நவ. 28: அரூர் அருகே மான் வேட்டையாடிய இருவருக்கு ரூ. 4 லட்சம் அபராதம் வெள்ளிக்கிழமை விதிக்கப்பட்டது.

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் வனச்சரகத்துக்கு உள்பட்ட வாதாப்பட்டி, சங்கிலிவாடி, செல்லம்பட்டி ஆகிய வனப் பகுதியில் மான்கள் வேட்டையாடப்படுவதாக புகார் எழுந்தது. இதையடுத்து, வனவர்கள் பவித்ரா, ஆர்.விவேகானந்தன், வனக் காப்பாளர்கள் ரமேஷ்குமார், அர்ச்சனா உள்ளிட்ட வனத் துறையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். அப்போது, வேங்கியாம்பட்டியில் விவசாயி ஒருவரது வீட்டில் 10 கிலோ எடையுள்ள மான் இறைச்சி, உரிமம் பெறாத ஒரு நாட்டுத் துப்பாக்கி உள்ளிட்டவை இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து, இதில் தொடர்புடைய வேங்கியாம்பட்டியைச் சேர்ந்த ஏழுமலை (27), தங்கமணி (45) ஆகியோரை வனத்துறையினர் கைது செய்தனர். தொடர்ந்து, வன விலங்குகளை வேட்டையாடிய குற்றத்துக்காக அவர்கள் இருவருக்கும் ரூ. 4 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.

PUBLIC NOTICE

This is to inform to the public that my client had proposed to purchase Land, an extent of Ac. 1.17 cents in Sy.No.232/2C2 of Sevaganapalli village of Hosur Taluk from its original owners namely **Mrs.Neelam Shekhawat and others.**

If there are any objections or claims in respect of the above said property, the interested persons can produce the relevant records and proof to substantiate the claim or objection for the sale of the property in favour of my client to the undersigned within fifteen (15) days of this publication. If there are no such claim or objection forthcoming it will be presumed that the above property is free from all defects and encumbrances and my client will proceed with the sale transaction as a bonafide purchaser for value and no future claim or objection will affect my client's right and title in respect of above property.

D.M.SHIVASHANKAR, B.com., LL.B.,M.B.A.,
ADVOCATE, Enrl. No. MS.1041(a) / 94
No. F-2, First floor, A.V.S.Towers,
Opp.Combined Court Buildings,
HOSUR - 635 109.
Cell No. 94432 70245.

தமிழ்நாடு அரசு
நிதித் துறை, சென்னை -9

தமிழ்நாடு அரசின் 7 ஆண்டுக்காலப் பிணையப் பத்திரம், தமிழ்நாடு அரசின் 8 ஆண்டுக்காலப் பிணையப் பத்திரம், தமிழ்நாடு அரசின் 10 ஆண்டுக்காலப் பிணையப் பத்திரம் மற்றும் தமிழ்நாடு அரசின் 30 ஆண்டுக்காலப் பிணையப் பத்திரம் ஏலத்தின் மூலம் விற்பனை செய்தல்

1. தமிழ்நாடு அரசு மொத்தம் ரூ.4000 கோடி மதிப்பில் ரூ.1000 கோடி மதிப்புள்ள 7 ஆண்டுக்காலப் பிணையப் பத்திரம், ரூ.1000 கோடி மதிப்புள்ள 8 ஆண்டுக்காலப் பிணையப்பத்திரம், ரூ.1000 கோடி மதிப்புள்ள 10 ஆண்டுக்காலப் பிணையப்பத்திரம் மற்றும் ரூ.1000 கோடி மதிப்புள்ள 30 ஆண்டுக்காலப் பிணையப்பத்திரம் ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய முன்வந்துள்ளது. இந்தப் பிணையப் பத்திரங்கள், குறைந்தபட்சம் ரூ.10,000/-க்கும் அதன் பின்னர் ரூ.10,000/-ன் மடங்குகளிலும் ஏலம் விடப்படும். இந்திய ரிசர்வ் வங்கியின் மும்பை (கோட்டை) அலுவலகம் **டிசம்பர் 02, 2025** அன்று இந்த ஏலத்தை நடத்தும்.

2. மாநில அரசின் பிணையப் பத்திரங்களை ஏலம் விடுவதற்கான பொது அறிவிக்கையின் (இணைப்பு-II)ன் திருத்தியமைக்கப்பட்ட போட்டியற்ற ஏலம் கேட்பு வசதி திட்டத்தின்படி (Revised Scheme for Non-Competitive Bidding Facility) விற்பனைக்காக அறிவிக்கப்பட்டுள்ள அந்த பிணையப் பத்திரங்களில், தகுதியுள்ள தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, ஒரு ஏலக் கேட்பிற்கு உச்சவரம்பாக அறிவிக்கப்பட்ட தொகையில் ஒரு சதவீதம் என்பதற்கு உட்பட்டு 10 சதவீதம் வரை ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒரு முதலீட்டாளர் ஒரு ஏலக் கேட்பினை மட்டுமே வங்கி அல்லது முதன்மைத் தரகர் (Primary Dealer) மூலமாக சமர்பிக்கலாம்.

3. ஆர்வமுள்ளவர்கள், ஏலக் கேட்பினை இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) மின்னணு படிவத்தில் (electronic format) **டிசம்பர் 02, 2025** அன்று கீழ்க்குறிப்பிட்டுள்ள முறையில் சமர்பிக்கலாம்:

அ) போட்டி ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் **10.30** மணியிலிருந்து **11.30** மணிக்குள் சமர்பிக்கப்பட வேண்டும்.

ஆ) போட்டியற்ற ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் **10.30** மணியிலிருந்து **11.00** மணிக்குள் சமர்பிக்கப்பட வேண்டும்.

4. ஏலம் கேட்பவர் ஆண்டொன்றுக்கு எதிர்பார்க்கக் கூடிய வட்டி விகிதத்தினை இரண்டு தசம ஸ்தானத்தில் தெரியப்படுத்த வேண்டும். ஒரு முதலீட்டாளர் வெவ்வேறு வட்டி விகிதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டி ஏலக் கேட்பினை மின்னணு படிவத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) சமர்பிக்கலாம். இருப்பினும், ஒரு நபர் கோரும் மொத்த ஏலக் கேட்புகள் அறிவிக்கப்பட்ட தொகைக்கு மேலாக செல்லக்கூடாது.

5. ஏலத்தின் முடிவுகள் **டிசம்பர் 02, 2025** அன்று இந்திய ரிசர்வ் வங்கியின் இணைய தளத்தில் வெளியிடப்படும். ஏலம் கிடைக்கப் பெற்றவர்கள், தங்களது ஏலங்களில் தெரிவிக்கப்பட்ட பிணையப் பத்திரங்களுக்கான விலையை இந்திய ரிசர்வ் வங்கி மும்பை (கோட்டை) அல்லது சென்னையில் செலுத்தத்தக்க வகையிலான வங்கியாளர் காசோலை (Bankers' Cheque) அல்லது கேட்போலையை (Demand Draft) **டிசம்பர் 03, 2025** அன்று வங்கிப்பணி நேரம் முடிவதற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

6. தமிழ்நாடு அரசின் பிணையப் பத்திரங்கள் ஏலத்தில் இந்திய ரிசர்வ் வங்கியால் நிர்மாணிக்கப்படக் கூடிய வட்டி வீதத்தில் 6 மாதத்திற்கு ஒரு முறை **ஜூன் 03 மற்றும் டிசம்பர் 03** ஆகிய தேதிகளில் வழங்கப்படும். இந்தப் பிணையப் பத்திரங்கள் அரசு பிணையப் பத்திரங்கள் சட்டம், 2006 (Government Securities Act, 2006) மற்றும் அரசு பிணையப் பத்திரங்கள் ஒழுங்குமுறை விதிகள், 2007 (Government Securities Regulations, 2007) ஆகியவற்றின்படி நிர்வகிக்கப்படும்.

7. இந்த பிணையப் பத்திரங்கள் மாற்றிக் கொடுக்கத் தக்க (Ready Forward Facility) தகுதியுடையதாகும்.

8. மற்ற விவரங்களுக்கு, தமிழ்நாடு அரசின் **நவம்பர் 28, 2025** நாளிட்ட **பிரத்யேக அறிவிக்கை எண். 869(L)/W&M-II/2025, எண். 870(L)/W&M-II/2025, 871(L)/W&M-II/2025** மற்றும் **எண். 872(L)/W&M-II/2025**- ஐக் காண்க.

த. உதயச்சந்திரன்
அரசு முதன்மை செயலாளர்
நிதித் துறை, சென்னை- 09.

செ.ம.தொ.இ./ 1420 /வரைகலை/2025

மாநகராட்சி அலுவலகம், ஒசூர்

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி 2023 பிரிவு 316ன் (4) (5)ன் கீழ் விளம்பரம் செய்யப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண். 276/2024/அ3 நாள் : 25.11.2025

ஒசூர் மாநகராட்சிக்கு சொந்தமான எம்.ஜி.ஆர். காய்கறி மார்கெட் வளாகத்தில் உள்ள மூன்றாண்டு ஆண்டுக் குத்தகை அடிப்படையில் குத்தகை விட இணையதளம் ஒப்பந்தப்புள்ளிகள் ஆணையாளரால் வரவேற்கப்படுகிறது. மேற்கண்ட எம்.ஜி.ஆர். காய்கறி மார்கெட் வளாகத்தில் உள்ள குத்தகை இனங்களுக்கு http://tntenders.gov.in என்கிற இணைய தளத்தின் மூலமாகவும் மாநகராட்சி மைய அலுவலகத்தில் 12.12.2025ம் தேதி காலை 11.00 மணிக்கு நடைபெறும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

1.	எம்.ஜி.ஆர். மார்க்கெட் கடைகள்	113
2.	மீன் மார்க்கெட் திண்ணை கடைகள் எண் 29 முதல் 42 வரை	C – பிளாக்
3.	எம்.ஜி.ஆர். காய்கறி மார்க்கெட் குளிர்சாதன வசதி அறை	1
4.	கட்டண கழிப்பிடம்	1

ஆணையாளர்
ஒசூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 141/செ.ம.தொ.அ./கிருஷ்ணகிரி/நாள் 28.11.2025

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூரு-560095.
கிளை அலுவலகம்: எண்.16, தலைத்தளம், பிரியா ஏவியோன், நியூ ரெயில்வே ஸ்டேஷன் ரோடு, கும்பகோணம், தமிழ்நாடு - 612001

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடன்/டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிறுச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடன்/டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	19.11.2025 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1172210180000049 1.Mrs.சித்தம்மாள் கிருஷ்ணன் 2.Mr.பாலசுப்ரமணி கிருஷ்ணன் 3.Mrs.நீதா சண்முகம்	(i) 07.10.2024 (ii) 03.10.2024 அன்றுள்ளபடி ₹17,50,307/- (ரூபாய் பதினேழு லட்சத்து ஐம்பதாயிரத்து முன்னூற்று ஏழு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 17.03.2025 & நேரடி சுவாதீனம் - 24.09.2025	₹ 22,58,650.35 (ரூபாய் இருபத்து இரண்டு லட்சத்து ஐம்பத்து எட்டாயிரத்து அறுநூற்று ஐம்பது மற்றும் பைசா முப்பத்து ஐந்து மட்டும்)	₹ 39,97,000/- (ரூபாய் முப்பத்து ஒன்பது லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரம் மட்டும்)	₹ 3,99,700/- (ரூபாய் மூன்று லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எழுநூறு மட்டும்)

சொத்து விவரம்: சேலம் மேற்கு பதிவு மாவட்டம் மற்றும் தாரமங்கலம் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட சர்வே எண். 180-3C, **கதவு எண்.8/53, முத்துநாயக்கன்பட்டி கிராமம், ஓமலூர் தாலுகா என்னும் முகவரியில் உள்ள 4360 சதுர அடி அளவை சொத்து,** அதனுடன் அளைத்து அனுபந்த உரிமைகள் மற்றும் வழிப்பாதை, அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மாயவன் ரோடு, தெற்கு: மாயவன் ஷெட்டூல் நிலம், கிழக்கு: ராஜேந்திரன் நிலம், மேற்கு: ரோடு. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கில் 85 அடி, கிழக்கு மேற்காக தெற்கில் 107½ அடி, தெற்கு வடக்காக கிழக்கில் 43 அடி, தெற்கு வடக்காக மேற்கில் 49 அடி.

இந்த சொத்தானது Mr.பாலசுப்ரமணி கிருஷ்ணன்-க்கு சொந்தமானது அதாவது (உங்களில் எண்.2-ல் உள்ள நபர்).

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 08.01.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 07.01.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் 06.01.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mr.ஞானவேல் - 98410 17131 / Mr.டீஜோ சாஜன் – 78451 92961.

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Mr.பிரபாகரன் Mob.74182 81709) உத்தேச விலைக்குறிப்பிட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பிட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பிட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.

i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

தேதி: 29.11.2025